# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,931—1964 ජනවාරි 24 වැනි සිකුරාදා—1964.1.24**

13,931 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு சனவரி மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

*[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 19 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 20 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கமத்தொழிற்றிணைக்களம்

**கமத்தொழிற் சாதனுபாடசாலைகள்—பயிற்சிநெறிகள், 1964–65**

கீழ்க்காணும் நிரலில் எடுத்துக்காட்டப்படும் கமத்தொழிற் சாதனுபாடசாலைகள் யாவற்றிலும் 1964–65 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி வகுப்புகள் 1964 ஆம் ஆண்டு எப்பிரல் மாதம் 20 ம் தேதி ஆரம்பமாகின்றது. இப்பாடசாலைகளிற் சேருவதற்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் தேதி 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ம் தேதியாகும்.

விண்ணப்பத்தாரர் பின்வரும் தகைமைகளுள்ளவராயிருத்தல் வேண்டும்:—

(1) அவர்கள் 1964 ஆம் ஆண்டு எப்பிரல் 20 ம் தேதியில் 16 வயதுக்கும் 22 வயதுக்குமிடையினராயிருத்தல் வேண்டும்.

(2) அவர்கள் சி. பா. த. பரீட்சையில் சித்தியெய்தியவர்களாய் அல்லது பொ. த. பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணக்கு ஆகிய பாடங்களுடன் வேறும் மூன்று பாடங்களில் சித்தியெய்தியவராயிருத்தல் வேண்டும்.

(பொ. த. பரீட்சையில் விவசாயப்பாடத்திலும் மற்றும் விஞ்ஞானப் பாடங்களிலும் சித்தியெய்தியவர்களும் விவசாய இளைஞர் களரிகளின் ஊக்கமுள்ள உறுப்பினர்களுமாயிருக்கும் விண்ணப்பகாரர் விரும்பப்படுவர்)

பிரதிப்பணிப்பாளர் (விவசாயக்கல்வியும் கமங்களும்), பேராதனை என்னும் முகவரிக்கு எப்பாடசாலையில் சேர உத்தேசிக்கப்படுகின்றதென் பதை எடுத்துக்காட்டி யெழுதி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கமத்தொழிலிலீடுபட விரும்புவோருக்கே இப்பயிற்சிகள் பொருத்தமானவை. பயிற்சி நிறைவேறியபின் அரசாங்க உத்தியோகம் கிடைக்குமெனக்கூறுதற்கிடமில்லை.

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 31 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 25 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

**பேர்னுட் த சில்வா,**
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு தை (சனவரி) மீ 17 ந் வ.*

| பாடசாலையுள்ள இடம் | உரிய மாவட்டம் | போதனுமொழி |
|---|---|---|
| **ஆடவர் பாடசாலைகள் :** | | |
| 1. மாப்பலான .. | மாத்தறையும் அம்பாந் தோட்டையும் | சிங்களம் |
| 2. இலபுதுவா .. | காலி .. | சிங்களம் |
| 3. கொறனு .. | களுத்துறை .. | சிங்களம் |
| 4. அம்பேபுசா .. | கொழும்பு .. | சிங்களம் |
| 5. வாகொல்லை .. | கேகாலை .. | சிங்களம் |
| 6. கறப்பிஞ்ஞா .. | இரத்தினபுரி .. | சிங்களம் |
| 7. பிபிலை .. | பதுளை, மொனராகலை, அம்பாறை | சிங்களம் |
| 8. பெல்வகரை .. | கண்டி, மாத்தளை, நுாரளை | சிங்களம் |
| 9. வாரியப்பொலை .. | குருநாகல், சிலாபம், புத்தளம் | சிங்களம் |
| 10. மகாஇலுப்பள்ளம<br>11. அனுராதபுரம் } | அனுராதபுரம், பொலன நறுவா | சிங்களம் |
| 12. கிளிநொச்சி .. | யாழ்ப்பாணம் .. | தமிழ் |
| 13. வவுனியா .. | வவுனியாவும் மன்னாரும் | தமிழ் |
| 14. கரடியன் ஆறு .. | மட்டக்களப்பு, திருகோண மலை, அம்பாறை | தமிழ் |

| பாடசாலையுள்ள இடம் | உரிய மாவட்டம் | போதனுமொழி |
|---|---|---|
| **மகளிர் பாடசாலை :** | | |
| 1. இலபுதுவா .. | காலி, மாத்தறை அம்பாந் தோட்டை | சிங்களம் |
| 2. வல்பிற்ரு .. | கொழும்பு, கண்டி, மாத் தளை, குருநாகல், புத் தளம்-சிலாபம், களுத் துறை, அனுராதபுரம், பொலனறுவா | சிங்களம் |
| 3. பற்றன்கல .. | கேகாலை, இரத்தினபுரி .. | சிங்களம் |
| 4. பண்டாரவளை .. | பதுளை, நுாரளை, மொனராக் கலை, அம்பாறை | சிங்களம் |
| 5. திருநெல்வேலி .. | யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை | தமிழ் |

ஏ. ரி. எம். சில்வா,
விவசாய அதிபர்.

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை, 1964 ம் ஆம் ஜனவரி மீ 10 ந் உ.

1-654—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன திணைக்களம்

### புத்தளம் நீர்ப்பாசன உபபிரிவு

கீழ்க்காணும் வேலைகட்கு கேள்விப்பத்திரங்கள் குருநாகலிலுள்ள வடமேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1964 ம் ஆண்டு பெப்ருவரி மாசம் 18 ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

| | வேலைகளின் பெயர் | ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை | | கேள்விக்கட்டணத் தொகை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | ரூ. | ச. |
| 1. | கறவித்தைக் குளத்தின் கீழ் 8 ம் மைல், 9 ம் மைல் வாய்க்கால் அமைத்தல் .. .. | 35,000 | 0 .. | 50 | 0 |
| 2. | பஹாறியாக்குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் பிரதான வலது வாய்க்கால் 1 ம், 2 ம் மைல்கள் அமைத்தல் | 49,000 | 0 .. | 50 | 0 |
| 3. | பஹாறியாக்குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் பிரதான வலது வாய்க்காலின் முதலாவது இரண்டாவது "டி" வாய்க்கால்களும் கட்டிட வேலைகளும் .. .. .. .. | 19,000 | 0 .. | 25 | 0 |
| 4. | வடத்தைக்குளம் திருத்தி அமைத்தல் .. .. .. .. | 39,000 | 0 .. | 50 | 0 |
| 5. | பஹல ஆச்சாரிய கம குளம் திருத்தி அமைத்தல் .. .. .. ... | 16,000 | 0 .. | 25 | 0 |
| 6. | குடாகும்புக்கடவெலகுளம் திருத்தி அமைத்தல் .. .. .. .. | 16,000 | 0 .. | 25 | 0 |
| 7. | மெதவாக்குளம் திருத்துதல் .. .. .. .. .. | 27,000 | 0 .. | 50 | 0 |

2. வேலைகட்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்த காரர்கள் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் புத்தளத்திலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ம் திகதி வியாழக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுக்கேள்விப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் வேலைகளுக்கு எதிரே குறிக்கப்பட்ட கேள்விக்கட்டணத் தொகையை ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்கும் செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

4. இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
புத்தளம் உப பிரிவு.

புத்தளம்,
1964 ம் ஆம் சனவரி மீ 17 ந் உ.

1–750—24.1.64 ந் தேதிய வர்த்தமானி இல. 13,931

## இலங்கைப் படைப் பகுதி

இலங்கைப் படைப் பகுதிக்கு டிஸ்டெம்பர் கையிருப்பால் அல்லது இறக்குமதி செய்து விநியோகஞ் செய்வதற்கு மெழுகிட்ட கேள்விகளைக் கொழும்பு செனற் கட்டிடத்திலுள்ள பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் கேள்விச் சபைத் தலைவர், 1964, பெப்ரவரி மாதம் 7 ந் திகதி முற்பகல் 9.30 மணிவரை ஒப்புக்கொள்வார்.

2. கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐ கொழும்பு படைப் பகுதி, தலைமைக் காரியாலயம், லோவர் லேக் வீதியிலுள்ள குடியியல் நிருவாக உத்தியோகத்தராகவும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம், கட்டிய பின்னரே கேள்விப்படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப் படிவங்கள் 1964, பெப்ரவரி மாதம் 6 ந் திகதி நண்பகல் 12 மணிவரை லவுநர், இலங்கை எஞ்சினியேர்ஸ் (வோர்க் சேவிசஸ்) படைப் பகுதி துருப்பு நிலையம், பனாகொடையில் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளாக உறையிலிட்டு, மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல்மூலையில் " டிஸ்டெம்பர் " எனக் குறிப்பிட்டு, கேள்விச் சபைத் தலைவர், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு, செனற் கட்டிடம், கொழும்பு என முகவரியிட்டு அனுப்பவேண்டும்.

4. முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட திகதி, நேரம் இடத்தில் கேள்விகள் பரிசீலனை செய்யப்படும். அவ்வேளையில் கேள்விக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விக்காரர்களில் யாராயினும் கேள்விகளில் எதையாயினும் பார்வையிடவிரும்பின், கேள்விச் சபைத் தலைவருடன் அதற்கான ஒழுங்கைச் செய்து அக்கேள்வியின் பிரதியை பார்வையிடலாம்.

கே. ராஜநாதன், மேஜர்,
மேஜர் ஜெனரல்,
படைப்பகுதி தலைமை அதிகாரிக்காக.

1-767—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### செங்கலடி உப பிரிவு

உன்னிச்சைத் திட்டத்தின் இடதுகரை வானுக்கு மேல் பாலம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 18 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் எற்றுக் கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 18,400 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் செங்கலடி உப பிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 14 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில 25 ரூபா கேள்விக் கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சு. இராசேந்திரம்,
நீர்ப்பானசப் பொறியியலாளர்,
செங்கலடி உப பிரிவு.

செங்கலடி உப பிரிவு,
1964 ம் ஆண்டு தை மீ 9 ந உ.

1-794—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### செங்கலடி உப பிரிவு

செங்கலடி உப பிரிவிலுள்ள வெலிக்காக்கண்டி குளத்து பிரதான முதலாம் கட்டை வாய்க்கால் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 18 ந திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 47,100/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் செங்கலடி உபபிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 14 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50/- ரூபா கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சு. இராசேந்திரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
செங்கலடி உப பிரிவு.

செங்கலடி உப பிரிவு,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந உ.

1-805/1—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### செங்கலடி உப பிரிவு

செங்கலடி உப பிரிவிலுள்ள வெலிக்காக்கண்டியா குளத்து பிரதான இரண்டாம் மூன்றும் கட்டை வாய்க்கால் அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 18 ந திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 24,950/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் செங்கலடி உப பிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 14 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 25/- ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில பெற்றுக்கொள்ளலாம்.

சு. இராசேந்திரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்.
செங்கலடி உப பிரிவு.

செங்கலடி உப பிரிவு,
1964 ம் ஆண்டு தை மீ 9 ந உ.

1-805/2—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

## நீர்ப்பாசன இலாகா

### கொழும்பு உப பகுதி

மேற் பெரும் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களால் (கொட்டா ரோட், கொழும்பு 8) கீழ் காணும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ந் தேதி செவ்வாய்க்கிழமை மணி 10 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | கேள்விக்காரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை |
|---|---|
| 1. சாரதிகளின் விடுதி—ரத்மலானையில் .. | ரூபா 24,000 அல்லது மேல் |
| 2. தும்மலதெனிய வெள்ளத்தடுப்புக் கட்டுமானம் .. .. | ரூபா 28,000 ஷை |
| 3. மில்லத்தையில் பெரிய அணைக்கட்டு .. | ரூபா 18,000 ஷை |
| 4. அக்குறு மூல்லையில் அணைக்கட்டு .. | ரூபா 17,000 ஷை |

2. மேற் குறிக்கப்பட்டுள்ள பிரகாரம் அருகதை உள்ள ஒப்பந்தக் காரர் மாத்திரம் மனுச்செய்யலாம்.

3. கொழும்பு உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் (ஜாவத்தை ரோட், கொழும்பு 5) அவர்களால் வழங்கப்படும் வெற்றுக் கேள்விப்பத்திரங் களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றுக்கேள்விப் பத்திரங்கள் காரியாலய நேரத்தில் 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ந் தேதி வெள்ளிக்கிழமை வரையும் வழங்கப்படும். வெற்றுக் கேள் விப் பத்திரங்கள் கேட்போர் தங்கள் பதிவுப் புத்தகங்களையும், தாங்கள் தற்போது இவ் விலாகாவில் செய்துகொண்டிருக்கும் வேலைகளின் பெறு மதியையும், அருகதை உள்ளவரா என்று தீர்மானித்துக்கொள்ளும் பொருட்டு நீர்ப்பாசன உப பகுதி இஞ்சினியருக்கு சமர்ப்பிக்க வேண்டும். மேலும் ரூபா 50 கட்டுப்பணம் கட்டிய அத்தாட்சிப் பத்திரம் காட்டப்பட வேண்டும்.

4. இக் கேள்வியைப் பற்றிய கூடிய விபரம் கொழும்பு உப பகுதி இஞ்சினியர் இடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. ஜே. பீ. குணவர்தன,
கொழும்பு உப பகுதி இஞ்சினியர்.

ஜாவத்தை ரோட்,
கொழும்பு 5, 1964 ம் ஆண்டு சனவரி மீ 15 ந உ.

1–688—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஹஸலக உப பிரிவு

நீர்ப்பாசன இலாகா ஹஸலக உப பகுதிக்குச் சேர்ந்த பின்வரும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

| | வேலைகளின் பெயர் | பதிவுத் தொகை ரூ. ச. | கேள்விக்கட்டணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | ஒன்பதாவது நிலப்பகுதியில் 32 ம் பங்கீட்டு வாய்க்காலுக்குச் சேர்ந்த இடது கரைகள், வலது கரைகள், 33 ம் பங்கீட்டு வாய்க்கால், 33 ம் பங்கீட்டு வாய்க்காலுக்குச் சேர்ந்த முதலாவது இடது கரை, 34 ம் பங்கீட்டு வாய்க்கால், 34 ம் பங்கீட்டு வாய்க்காலுக்குச் சேர்ந்த வலது கரைகள் ஆகியவை கட்டுதல் (மண் வேலை முதலியவை) .. .. .. .. | 45,000 0 .. | 50 0 |
| 2. | எட்டாவது நிலப்பகுதியில் 30 ம் பங்கீட்டு வாய்க்கால் (முதலாவது கட்டை) கட்டுதல் (மண் வேலை முதலியவை) .. .. .. | 40,000 0 .. | 50 0 |
| 3. | எட்டாவது நிலப்பகுதியில் 30 ம் பங்கீட்டு வாய்க்கால் (இரண்டாவது கட்டை) கட்டுதல் (மண் வேலை முதலியவை) .. .. .. | 40,000 0 .. | 50 0 |
| 4. | ஹஸலக சிறு குளத்தின் உள் மதவுக்கு இரும்பினால் இணைக்கப்பட்ட கதவுகள் கொடுத்தல் .. | 35,000 0 .. | 50 0 |
| 5. | ஹஸலக சிறு குளத்தின் வெளி மதவுக்கு இரும்பினால் இணைக்கப்பட்ட கதவுகள் கொடுத்தல் .. | 35,000 0 .. | 50 0 |
| 6. | எட்டாவது நிலப்பகுதியில் 31 ம் பங்கீட்டு வாய்க்காலுக்குச் சேர்ந்த இடது கரை ஒன்று தொடக்கம் மூன்று வரையும் அவைகளைச் சார்ந்த வயல் வாய்க்கால்களும் கட்டுதல் (மண்வேலை முதலியவை) .. | 30,000 0 .. | 50 0 |
| 7. | எட்டாவது நிலப்பகுதியில் 30 ம் பங்கீட்டு வாய்க்காலுக்குச் சேர்ந்த இடது கரை 1 தொடக்கம் 4 வரையும், அவைகளைச் சார்ந்த வயல் வாய்க்கால்களும், வலது கரை 9 தொடக்கம் 10 வரையும் கட்டுதல் (மண்வேலை முதலியவை) .. .. .. .. | 30,000 0 .. | 50 0 |
| 8. | எட்டாவது நிலப்பகுதியில் வேவரவெவக் கட்டைப் புதுப்பித்தலோடு வலது கரை 1 தொடக்கம் 7 வரையும் அவைகளைச் சார்ந்த வயல் வாய்க்கால்களும் கட்டுதல் (மண் வேலை முதலியவை) .. .. | 25,000 0 .. | 25 0 |
| 9. | ஒன்பதாவது நிலப்பகுதியில் கட்டடங்கள் (கொன்கிறீட் வேலைகள்) கட்டுதல் .. .. | 25,000 0 .. | 25 0 |
| 10. | பிரதான வாய்க்காலில் 29 ம் கட்டை 24 ம் சங்கிலியில் 200 அடி வானும் தண்ணீர் கடப்பும் கட்டுதல் .. | 25,000 0 .. | 25 0 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக் கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்கள் பல்லேவத்தையிலுள்ள ஹஸலக உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ம் திகதி திங்கட்கிழமை பகல் 12.00 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைக்கும் மேல் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. வி. குணவர்தன,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹஸலக உப பிரிவு.

ஹஸலக, பள்ளேவத்தை,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 11 ம் உ.

1–810—24.1.64 ந் தேதிய வர்த்தமானி இல. 13,931

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### வவுனிக்குளம் உபபிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 18 ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை பத்து மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும் :—

| வேலை விபரம் | பதிவுத்தொகை | கேள்விப்பத்திர கட்டுப்பணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வவுனிக்குளத்தின் இடக்கரைப் பிரதான வாய்க்காலின் 3 ம் மைல் கட்டுதல் .. .. | 24,000 .. | 50 |
| வவுனிக்குளத்தின் இடக்கரைப் பிரதான வாய்க்காலின் 4 ம் மைல் கட்டுதல் .. .. | 36,000 .. | 50 |
| வவுனிக்குளத்தின் வலக்கரைப் பிரதான வாய்க்காலின் 9 ம் இலக்க பங்கீட்டு வாய்க்கால் கட்டுதல் .. | 33,000 .. | 50 |

2. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் ஒட்டுசுட்டானிலுள்ள முல்லைத்தீவு உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 14 ம் தேதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் மேற்கூறிய தொகையைக் கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

3. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

மான்குளம்,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 11 ந வெ.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனிக்குளம் உப பிரிவு.

1-586—24.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,931

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் **வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், **விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய **சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.